அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 7

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

மாந்தன் மெய், கண், காது, மூக்கு, வாய் ஆகிய ஐம்பொறிகளின் வழியே ஊறு, ஒளி, ஒலி, நாற்றம், சுவை ஆகிய ஐந்து உணர்வுகளைப் பெற்றவனாக இவ்வுலகில் வாழ்கின்றான். ஐம்பூதங்களான நிலம், நீர், வானம், காற்று, தீ ஆகியவற்றை உணர்த்துவனவாக மாந்த உடலில் ஐம்பொறிகள் காணப்படுகின்றன எனலாம். பொதுவாக உயிரினங்கள், அவை கொண்டுள்ள பொறிகளின் அடிப்படையில் ஓரறிவு கொண்ட உயிரினங்கள் முதலாக ஆறறிவு கொண்ட உயிரினங்கள் வரை வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் ஓரறிவு முதல் நான்கறிவு வரையான உயிரினங்கள் அவற்றின் பொறிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறே ஐந்தறிவு கொண்ட உயிரினங்களும் ஆறறிவு கொண்ட மாந்தரும் பொறிகளின் அடிப்படையில் ஒன்றுபடுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.